பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**16 10 2026** **06 45**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கு தேவையான உதவிகளை வழங்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

**2.** விளையாட்டு வீரர்களின் திறனை மேம்படுத்துவதில் விளையாட்டு அமைப்புகள் கூடுதல் பொறுப்பேற்க வேண்டும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

**3.** நிர்வாக ரீதியில் மத்திய அரசுடன் தமிழக அரசு இணக்கமாக செயல்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர். அருண்ராஜ் குறிப்பிட்டுள்ளார்.

**4.** கலையின் மீது மதச்சாயம் பூசும் செயலுக்கு பி.ஜே.பி. மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

**5.** இந்தியா - ஜிம்பாப்வே இடையேயான முதலாவது மகளிர் டுவென்ட்டி-டுவென்ட்டி கிரிக்கெட் போட்டி ராய்ப்பூரில் இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><><>

நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கு தேவையான உதவிகளை வழங்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலம் **Bastar-**ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொளி மூலம் உரையாற்றிய அவர் இதனை தெரிவித்தார்.

**50** ஆண்டுகாலமாக நீடித்துவந்த நக்சல் தீவிரவாதத்தால், இப்பகுதியில் உள்ள பழங்குடியின மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

**Bastar-**ல் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை அம்மாநில அரசு மேற்கொண்டு வருவதாக திரு. அமித்ஷா கூறினார்.

<><><><><><><><>

இந்தியாவில் விளையாட்டு வீரர்களின் திறனை மேம்படுத்துவதில் தேசிய விளையாட்டு சம்மேளனங்கள் கூடுதல் பொறுப்பேற்க வேண்டும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய அவர் இதனை தெரிவித்தார்.

பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வெல்லும் வகையில் திறன் வாய்ந்த நபர்களை கண்டறிந்து அவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வீரர்கள் எதிர்க்கொள்ளும் சவால்களை குறைக்க உளவியல் நிபுணர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் திருமதி. ரக்ஷா கட்சே, கேலோ இந்தியா திட்டத்தின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப விளையாட்டு அமைப்புகள் பொறுப்புடன் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<><><><><><><>

நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், சர்வதேச அளவில் முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, புதுப்பிக்கத்தக்க உச்சி மாநாடு மற்றும் கண்காட்சியை நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

<><><><><><><>

தமிழகத்தில் கிராமப்புற மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மாநில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஆனந்த் தெரிவித்துள்ளார்.

கோவையில், வடகிழக்குப் பருவமழைக்கான முன்னேற்பாடுகள் குறித்து நடைபெற்ற மண்டல அளவிலான கூட்டத்தில் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

ஊரக வளர்ச்சித்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகள் அனைத்தும் குறித்த காலத்தில் விரைந்து முடிக்கப்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில், உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் ஊழியர்களின் செயல்பாடுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் தெரிவித்தார்.

மழைக்காலங்களில் நோய்த்தடுப்பு, சாலை பராமரிப்பு, பாதுகாப்பான குடிநீர் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு

நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று திரு. ஆனந்த் வலியுறுத்தினார்.

<><><><><><>

நிர்வாக ரீதியில் மத்திய அரசுடன் தமிழக அரசு இணக்கமாக செயல்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர். அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இவ்வாறு கூறினார்.

<><><><><><>

கலையின் மீது மதச்சாயம் பூசுவது கண்டனத்துக்குரியது என்று பி.ஜே.பி. மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதள பதிவில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தனியார் தொலைக்காட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த சிறுமி. முருகன் பாடலை பாடியதற்காக சிலர் அவருக்கு மிரட்டல் விடுக்கப்படுவதை, மாநில அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

பிற மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்து பாடல்களை பாடுவதும், இந்து மதத்தைச் சேர்ந்த பலர் கிறித்துவ மற்றும் இஸ்லாமிய பக்தி பாடல்களை பாடுவதும் வழக்கமான ஒன்று என்று அவர் கூறினார்.

சம்பந்தப்பட்ட சிறுமிக்கு மிரட்டல் விடுக்கும்ந பர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன், அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அரசு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<><><><><><>

தமிழகத்தில் மின் தட்டுப்பாட்டை செயற்கையாக உருவாக்குவதன் மூலம் அதிக விலையில் மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளை த.வெ.க அரசு மேற்கொண்டு வருவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

சென்னையில், செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் சட்டமன்ற கொறடா திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி, இது முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் என்று கூறினார்.

தமிழகத்தில் குதிரை பேரத்தில் ஈடுபடுபவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆளுநரிடம் மனு அளித்திருப்பதாக திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

<><><><><><>

தமிழகத்தில் நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், தென்காசி, மதுரை ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கன முதல் மிக கன மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ளதையடுத்து, தென் கடலோர பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக தமிழகத்தில் பரவலாக இன்றும், நாளையும் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

<><><><><><><><>

பொதுமக்களுக்கு எதிரான வன்முறை மற்றும் தீவிரவாத அச்சுறுத்தல்களுக்கு எவ்வித சமரசத்திற்கு இடமின்றி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

---------------

கடற்படையின் வலிமையை அதிகரிக்கும் வகையில், நீருக்கடியில் இருந்து ஏவப்படும் இரண்டு வகையான ஏவுகணைகள் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

------------

மாஸ்கோவில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளைக் குறிவைத்து யுக்ரைன் ட்ரொன் தாக்குதல் நடத்தியதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

------------

மின்னணு நிர்வாக சீர்திருத்தங்கள் குறித்த இரண்டு நாள் மாநாடு இமாச்சலப் பிரதேச மாநிலம் தரம்சாலாவில் இன்று தொடங்குகிறது.

-------------

இந்தியாவின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை 5 புள்ளி இரண்டு பில்லியன் அமெரிக்கா டாலர்களாக குறைந்துள்ளது.

---------------

இந்தியாவில் வேலைவாய்ப்பின்மை விகிதம் 5 சதவீதமாக குறைந்துள்ளது என தேசிய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

---------------

தமிழகத்தில் பழங்குடியின சமுதாயத்தில் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தும் வகையில், ஒப்பந்த அடிப்படையிலான இரண்டு பணியிடங்களுக்கு தகுதியான நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

---------------

தமிழ்நாடு மாநில வளர்ச்சி கடன் நிலுவைத்தொகை உரிய வட்டியுடன், நவம்பர் 20 ஆம் தேதியன்று திருப்பிச் செலுத்தப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

---------------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் 6 ஆயிரம் மாணவிகள் பங்கேற்ற பாரம்பரிய சமையல் கொண்டாட்ட சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது.

---------------

திருவள்ளூர் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலுக்கான சிகிச்சை முறைகள் குறித்து அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுடன் பயிற்சி முகாம் ஆட்சியர் திருமதி. கவிதா தலைமையில் நடைபெற்றது.

---------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் மத்திய அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் முடிவுற்ற பணிகளை ஆட்சியர் திரு. நல்லசிவன் திறந்து வைத்தார்.

---------------

இந்தியா - ஜிம்பாப்வே இடையேயான முதலாவது மகளிர் டுவென்ட்டி-டுவென்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ராய்ப்பூரில் இப்போட்டி இரவு 7 மணிக்குத் தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடரில், இரண்டாவது போட்டி 18-ம் தேதியும், மூன்றாவது மற்றும் இறுதிபோட்டி 20-ம் தேதியும் நடைபெறவுள்ளது.

இவ்விரு அணிகளும் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரிலும் பங்கேற்கின்றன.

------------

டென்மார்க் ஓபன் பேட்மின்டன் போட்டியில் இந்தியாவின் தன்வி சர்மா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 21-19, என்ற செட் கணக்கில் ஜெர்மனியின் Yvonne Li-ஐ வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் Treesa Jolly - Gayathri Gopichand இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-16, 21-17, என்ற நேர் செட்களில் இந்தோனேசியாவின் Rachel Allessya - Rose Febi இணையை வென்றது.

--------------

**எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்று வரும் உலக ஜூனியர் பேட்மின்டன் போட்டியில், இந்தியாவின் Jagsher Singh KHANGURRA அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.**

<><><><><><><>